நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, திருவில்லிபுத்தூர்.
**முன்னிலை – செல்வி.தி.சுபாஷினி., B.Com., L.L.B(Hons)., L.L.M.,**
நீதித்துறை நடுவர் எண்.II, திருவில்லிபுத்தூர்.
2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 13 ம் நாள் வெள்ளிக்கிழமை
**குற்றவியல் பல்வகை மனு.179/2026**

அன்பரசன், (34/26),
த/பெ.மூக்காண்டி, ... மனுதாரர்/சொத்தின் உரிமையாளர்

/எதிரிடை/

அரசுக்காக காவல் ஆய்வாளர்
திருவில்லிபுத்தூர் காவல் நிலைய
குற்ற எண்.94/2026 ... எதிர்மனுதாரர் / குற்றமுறையீட்டாளர்

இம்மனு கடந்த 10.02.2026 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டு 19.02.2026 ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு 06.03.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.ராம்குமார், B.A, B.L, அவர்கள் ஆஜராகியும், அரசு தரப்பில் கற்றறிருந்த அரசு உதவி வழக்கறிஞர் நிலை–2 திருமதி.P.பெத்துரதி, MBA., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...

**உத்தரவு**

மனுதாரர் தரப்பில் BNSS பிரிவு 497 மற்றும் 503 ன்– கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் வழக்கு சொத்து பி.ஆர்.எண்.84/2026–ல் உள்ள வழக்கு சொத்தை மனுதாரர் வசம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைக்கக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர் மனுவின் சுருக்கம்–**

இம்மனுவின் மனுதாரர்/ வாகனத்தின் உரிமையாளர் என்றும், கடந்த 04.02.2026 ம் தேதி அதிகாலை 05.00 மணியளவில் பதிவு எண்.TN 72 BF 5116 Tractor along with Trailor 1 யூனிட் மணல் இருந்ததை மேற்படி போலீஸ் பார்ட்டி மணல் திருட்டை தடுக்கும் பொருட்டு ரோந்து சுற்றி வந்த போது மேற்படி போலீஸ் பார்ட்டியை கண்டவுடன் மேற்படி வழக்கின் எதிரிகள் இருசக்கர வாகனம் TN 84 E 9189 என்ற எண் கொண்ட Honda Unicorn வாகனம் மற்றும் TN 64 B 8033 என்ற எண் கொண்ட HF Delux என்ற இருசக்கர வாகனத்தை மணல் திருட்டு சம்பவத்திற்கு பயன்படுத்தியதாகவும், மேற்படி மணல் கொண்டு செல்ல அரசு அனுமதியோ, உரிமமோ இல்லாமல் இருந்தவர்களை போலீஸ் பார்ட்டி மடக்கி பிடித்து அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி தனக்கு சொந்தமான இருசக்கர வாகனம் பதிவு

எண்.TN 84 E 9189 என்ற எண் கொண்ட Honda Unicorn வாகனம் குற்ற முறையீட்டாளரால் பறிமுதல் செய்யப்பட்டு குற்றமுறையீட்டாளர் வசம் உள்ளது என்றும், மேற்படி இருசக்கர வாகனம் திறந்த வெளியில் நிற்பதால், மழை மற்றும் வெயிலால் பாதிப்படையக்கூடிய சூழ்நிலை இருந்து வருவதோடு மேற்படி வாகனம் தொடர்ந்து உபயோகப்படுத்தாமல் பாதுகாப்பற்ற நிலையில் இருந்து வருவதால் முழுமையாக பயன்படுத்த முடியாத நிலைக்குப் போய்விடும் என்பதால் மேற்படி வாகனத்தை இடைக்காலமாக தன்னிடம் ஒப்படைக்க வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

3. அரசு தரப்பில் எதிர்மனுதாரர் தரப்பில் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கின் சொத்தை மனுதாரரிடம் திரும்ப கொடுக்கும்பட்சத்தில் அவர் அதனை விற்று பணமாக மாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், உருமாற்றம் செய்யக்கூடும் என்பதாலும், மேற்படி இருசக்கர வாகனத்தை வழக்கு விசாரணையின் போது ஆஜர் செய்யாமல் இருப்பதற்கும் வாய்ப்பு உள்ளது என்று கூறி ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

4. மனுதாரர் தரப்பில், மனுதாரரின் ஆவணமான ஆதார் அட்டை நகல், ஆர்.சி.புத்தகத்தின் நகல் ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. தற்போது நீதிமன்றத்தின் முன்பு எழுந்துள்ள வினா மேற்படியான மனுவை அனுமதிப்பதா வேண்டாமா என்பதே ஆகும்.

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மேற்படி ஆதார் அடையாள அட்டை மற்றும் வாகனத்தின் ஆர்.சி.புத்தகத்தை பரிசீலனை செய்து பார்க்கையில் இருசக்கர வாகனத்திற்கு மனுதாரர் தான் உரிமையாளர் என்பது தெரிய வருகிறது. இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்தானது நீதிமன்றத்தில் ஒப்படைத்து PR.No.84/2026 கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் அரசு தரப்பில் மனுதாரர் தான் இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் என்பது குறித்து ஆட்சேபணை தெரிவிக்கப்படவில்லை. மேலும் வாகனத்தின் அசல் ஆர்.சி.புத்தகமும் மனுதாரர் வசம் தான் உள்ளது. மனுதாரர் அவரது மனுவுடன் தாக்கல் செய்துள்ள உறுதிக்கூற்றில் வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தை நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு ஆஜர்படுத்துவதாக உறுதி கூறியுள்ளார். வழக்கு சொத்தை உபயோகப்படுத்தப்படாமல் இருந்தால் அதன் பயன்பாடும், மதிப்பும் குறைந்து விட வாய்ப்பும் உள்ளது. மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றம் சுந்தர்பாய் அம்பாலால் தேசாய் –எதிர்– குஜராத் மாநிலம் 2002 (10) SCC 283 என்ற வழக்கில் சொல்லியுள்ள கோட்பாட்டினை கருத்திற் கொண்டும், கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் மேற்படி வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரரிடம் இடைக்கால பொறுப்பில் ஒப்படைப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

1. வழக்கு சொத்துக்கு ஈடாக மனுதாரரும், இரண்டு ஜாமீன்தாரர்களும் தலா ரூ.1,00,000/− க்கு  பிணை பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.

2.வழக்கு சொத்தை முழுமையாக காட்டக்கூடிய அனைத்து பரிமாணங்களிலிருந்தும் எடுக்கப்பட்ட புகைப்படத்தை தாக்கல் செய்ய வேண்டும். அதற்கான பாரதிய சாக்சய அதினியம் பிரிவு 63−ன் கீழான சான்றிதழை தாக்கல் செய்யவேண்டும்.

3. அசல் வழக்கு முடியும் வரை வழக்கு சொத்தை விற்பனை செய்யவோ, அடமானம் வைக்கவோ, வேறு வில்லங்க விவகாரத்தில் ஈடுபடுத்தவோ கூடாது.

4. வழக்கு விசாரணையின் போது வழக்கு சொத்துக்களை ஆஜர்படுத்த வேண்டும்.

5. வழக்கு சொத்துக்கு பஞ்சநாமா தயார் செய்து தாக்கல் செய்யப்பட வேண்டும்.

6, வழக்கு சொத்தான இருசக்கர வாகனத்தின் அசல் R.C புத்தகத்தை  நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டும்.

இந்த  உத்தரவு என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026 ஆண்டு மார்ச்  திங்கள் 13 ம் நாளாகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

-Sd/-Ms.T.Subashini-
நீதித்துறை நடுவர் எண்.2
திருவில்லிபுத்தூர்.